தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 10.11.2020</u>

**<u>முன்னிலை</u>**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 5121/B/2019</u>**

திருமதி. காஞ்சனா — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
சேலம் வட்டம்,
சேலம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர், திருமதி. P. காஞ்சனா அவர்கள் சார்பாக அவர்களின் மகனும் பொது தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் சேலம் வட்டம் அவர்களும் விசாரணையில் கலந்து கொண்டார்கள்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)ன் கீழ் அளிக்கப்பட்ட தனது 4.7.2018 தேதியிட்ட மனுவில், சேலம் மாவட்டம், சேலம் வட்டம், வீராணம் கிராமம் சர்வே எண்.243, பட்டா எண்.1212 சம்மந்தமாக 4 இனங்களில் தகவல் வேண்டி, பொது தகவல் அலுவலர், சேலம் மாவட்ட வட்டாட்சியர் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலரிடமிருந்து பதில் கிடைக்கப் பெறாத மனுதாரர் 16.3.2019 தேதியிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு விண்ணப்பித்துள்ளார்.

மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், 30.5.2019 தேதியிட்டு, இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

4. இன்றைய தின விசாரணையின்போது, பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு ஒரு வார காலத்திற்குள் தகவல் அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டார். மனுதாரர், பொது தகவல் அலுவலர் அலுவலகத்திற்கு சென்று தகவல் பெற்றுக் கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டார்.

5. மேற்படி பொது தகவல் அலுவலர் தெரிவித்தவாறு, மனுதாரருக்கு தகவல் வழங்கிவிட்டு, 17.11.2020 தேதியிட்டு வழங்கப்பட்ட தகவலின் நகலினை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அதனை பரிசீலனை செய்கையில், மனுதாரருக்குரிய தகவல் அவருக்கு வழங்கப்பட்டது என்பதை ஆணையம் பதிவு செய்து, இந்நேர்வில் பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் திருப்தியளிக்காதபட்சத்தில், பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்து, உரிய பரிகாரத்தை தேடிக் கொள்ள மனுதாரருக்கு ஆணையம் அறிவுறுத்தி, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**
**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA/5121/B/2019</u>**

பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு</u>
பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
சேலம் வட்டம், சேலம் மாவட்டம்.

மனுதாரர்
திருமதி.P. காஞ்சனா,
க/பெ T. பத்மநாபன் அய்யர்,
9/174, சத்திரத்துக்காடு,
உடையார்பட்டி அஞ்சல்,
சேலம் வட்டம், சேலம் மாவட்டம்.
அலைபேசி - 999 49 21 474

Copy to: File
SS/PA 16/11/2020